பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 06 2025 **SUNDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்ற உணர்வின் பிரதிபலிப்பாக புனித யாத்திரைகள் திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. ஆயுதங்களை கைவிட்டால் மட்டுமே நக்ஸலைட்டுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்

3. நாட்டு நலனுக்கு எதிராக செயல்படுவோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

4. தென்மேற்குப் பருவமழை நாடு முழுமைக்கும் விரிவடைந்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய கோப்பைக்கான மகளிர் கால்பந்து தகுதிச்சுற்றுப் போட்டியில் இந்தியா 4-0 என்ற கோல்கணக்கில் **Timor Leste**-ஐ வென்றது..

>>>>>><<<<<

ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்ற உணர்வின் பிரதிபலிப்பாக புனித யாத்திரைகள் திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மன் கி பாத் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - மோடி (1) 58 செகண்ட்ஸ்)

அஸ்ஸாமின் முக்கிய பகுதியான **Bodoland**-ல் **CEM** கோப்பை கால்பந்து போட்டிகளுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும், இது ஒற்றுமை மற்றும் நம்பிக்கைக்கான போட்டி என்றும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

(சவுண்ட் பைட் - மோடி (2) 52 செகண்ட்ஸ்)

பிரதமர் ஆற்றிய உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>>><<<<<

ஆயுதங்களை கைவிட்டால் மட்டுமே நக்ஸலைட்டுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

தெலங்கானா மாநிலம், நிஸாமாபாதில் மஞ்சள் வாரியத்தின் தேசிய தலைமையகத்தை இன்று திறந்து வைத்து அவர் பேசினார்.

ஆயுதங்களை வைத்திருப்போருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட மாட்டாது என்பது மத்திய அரசின் உறுதியான நிலைப்பாடு என்றும் அவர் கூறினார்.

ஆயுதங்களை கைவிடுவோரின் மறுவாழ்வு உறுதி செய்யப்படும் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>>><<<<<

நாட்டு நலனுக்கு எதிராக செயல்படுவோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்

இன்று சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - டாக்டர் முருகன் (1) 49 செகண்ட்ஸ்)

அவசரநிலை பிரகடனம் என்பது ஜனநாயக படுகொலையாகும் என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - டாக்டர் முருகன் (2) 38 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

தென்மேற்குப் பருவமழை நாடு முழுமைக்கும் விரிவடைந்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

வழக்கத்தைவிட 9 நாட்களுக்கு முன்னதாக, நாடு முழுமைக்கும் பருவமழை விரிவடைந்துள்ளதாக அந்த மையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஜார்க்கண்ட், ஒடிசா, பீகார், மத்தியப்பிரதேசம், சத்திஷ்கட், ஹிமாச்சலப்பிரதேசம், உத்ராகண்ட், உத்தரபிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களில் அடுத்த 7 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடியை தாண்டியுள்ளதால் உபரி நீர் திறக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜசேகரன் 37 செகண்ட்ஸ்)

உபரி நீர் திறக்கப்பட்டதன் காரணமாக, கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

880 குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

கேரளாவின் பத்தினம்திட்டா, கோட்டயம், இடுக்கி, மலப்புரம் மற்றும் வயநாடு மாவட்டங்களில் கனமழை நீடிக்கக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

>>>>>><<<<<

சைக்கிள் பயணம் தினசரி மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் மாநிலம், **Palitana-**வில் ஞாயிறு தோறும் சைக்கிள் பயணம் இயக்கத்தில் பங்கேற்று அவர் பேசினார்.

நாடுமுழுவதும் ஆறாயிரம் இடங்களில் இந்த சைக்கிள் பயண இயக்கம் நடைபெற்றதாக அவர் தெரிவித்தார்.

உடல்நலனை சீராக பராமரிக்க சைக்கிள் பயணம் உதவிடும் என்று திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

>>>>>><<<<<

அஹமதாபாதில் ஏர் இண்டியா விமான விபத்துக்குள்ளானது குறித்து, விமான விபத்துகளுக்கான விசாரணை மையம் விசாரணை மேற்கொண்டு வருவதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை இணையமைச்சர் திரு. **Murlidhar Mohol** கூறியுள்ளார்.

புனே-யில் தனியார் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், முதல்கட்ட விசாரணையில் தீவிரவாத தாக்குதலுக்கான காரணங்கள் கண்டறியப்படவில்லை என்று கூறினார்.

விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்புப் பெட்டி, ஆய்வுகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<

பூரி ரதயாத்திரையின்போது கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 3 பேரின் குடும்பத்தினருக்கு தலா 25 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று ஒடிசா அரசு அறிவித்துள்ளது.

பூரி மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் இடமாற்றம் செய்யப்படுவதாகவும் அம்மாநில அரசு கூறியுள்ளது.

பக்தர்களின் பாதுகாப்பு விஷயத்தில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் ஒடிசா அரசு தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி, இந்த விபத்து நேரிட்டதற்காக பக்தர்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்வதாகவும் கூறியுள்ளார்.

**>>>>>><<<<<**

யுக்ரைனுக்கு எதிராக பெரிய அளவிலான வான்வழித் தாக்குதலை ரஷ்யா நடத்தியுள்ளது.

நூற்றுக்கணக்கான ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை பயன்படுத்தி இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

500 வகையான பாதுகாப்பு தளவாடங்களுடன் ரஷ்யா இந்த தாக்குதலை நடத்தியதாக யுக்ரைன் கூறியுள்ளது.

யுக்ரைனின் 6 நகரங்களை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<**

ஆசிய கோப்பைக்கான மகளிர் கால்பந்து தகுதிச்சுற்றுப் போட்டியில் இந்தியா 4-0 என்ற கோல்கணக்கில் **Timor Leste**-ஐ வென்றது.
தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இன்றைய ஆட்டத்தில் இந்தியாவின் மனிஷா கல்யான், அஞ்சு தமாங், லிண்டா கோம் ஆகியோர் கோல் அடித்தனர்.

**>>>>>><<<<<**

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ankur Bhattacharjee – Taneesha Kotecha** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.
தாஷ்கண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின், கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 11-8, 12-10, 11-9 என்ற செட்கணக்கில் ஜப்பானின் **Yoshiyama – Mende** இணையை வென்றது.

**>>>>>><<<<<**

பெர்லினில் நடைபெற்று வரும் புரோ ஹாக்கி லீக் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா – சீனா இடையேயான இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

**>>>>>END<<<<<**